தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-10-2012

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மக்காச்சோளத்தை விவசாயிகள் டிசம்பருக்குப் பிறகு அல்லது உடனடியாக விற்க அறிவுறுத்தப்படுகின்றனர்

2012-13 ல் , சர்வதேச மக்காச்சோள உற்பத்தி கடந்த ஆண்டைக் காட்டிலும் 7.5 சதவீதம் அதிகரித்து 940.8 மில்லியன் டன்களாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை கணக்கிட்டுள்ளது. 2011-12 ல் நிலவிய எதிர்மறையான காலநிலையினால் ஏற்பட்ட குறைந்த உற்பத்தியிலிருந்து மீண்டு 2012-13 ல் உற்பத்தி 20 சதவீதம் அதிகரிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதிகப்படியான உற்பத்தியை எத்தனாலுக்கான மக்காச்சோளத் தேவை ஈடுகட்டும்.

அமெரிக்கா, சீனா, பிரேசில், மெக்சிகோ, அர்ஜென்டைனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உலக மக்காச்சோள உற்பத்தியில் 75 சதவீதம் பங்களிக்கிறது. உலக மக்காச்சோள உற்பத்தியில் அமெரிக்கா 40 சதவீதமும் இந்தியா 3 சதவீதமும் பங்களிக்கின்றன. ஏற்றுமதியாளர் வரிசையில் அமெரிக்கா முன்னிலை வகிக்கிறது. உலக மக்காச்சோள வர்த்தகத்தில் இந்தியா 2 சதவீதம் பங்களிக்கிறது. 2011-12 ல் இந்தியா 4 மில்லியன் டன் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்தது. சர்வதேச சந்தையில் நிலவிய அதிக விலை மற்றும் ரூபாய் மதிப்பு வீழ்ச்சி ஆகிய காரணங்கள் மக்காச்சோள ஏற்றுமதிக்கு உதவியது. மேலும் இதே நிலை இந்த ஆண்டும் நீடிக்கும்.

இந்தியாவில் 60 சதவீத மக்காச்சோளம் தீவனத் துறையில் முக்கியமாக கோழித் தீவனத்தில் பயன்படுத்தப்படுகிறது. 20 சதவீத மக்காச்சோளம் மாவுத் துறையில் பயன்படுத்தப்படுகிறது. கோழித் தீவனத்திற்கான மக்காச்சோளத் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தியா 2011-12 ல் 21.6 மில்லியன் டன் மக்காச்சோளத்தை 8.67 மில்லியன் எக்டரில் உற்பத்தி செய்தது. கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, இராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள், மக்காச்சோளப்பரப்பில் 60 சதவீத பரப்பு மற்றும் உற்பத்தில் 70 சதவீத மக்காச்சோள உற்பத்தியில் பங்களிக்கின்றன. 2011-12 ல் கர்நாடக மாநிலம் 4.1 மில்லியன் டன் மக்காச்சோளத்தை 1.3 மில்லியன் எக்டரில் உற்பத்தி செய்தது.

ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகியன மக்காச்சோள உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் மாநிலங்கள் ஆகும். மக்காச்சோள உற்பத்தியில் இந்தியாவில் கடந்த ஆண்டு ஏழாமிடத்தில் இருந்த தமிழகம் அதிக உற்பத்தித்திறன் (5176.4 கிலோ / எக்டர்) மற்றும் அதிகப் பரப்பினால் இந்த ஆண்டு நான்காம் இடத்தில் உள்ளது.

இந்தியாவில் கரீப் மற்றும் ரபி ஆகிய முக்கிய பருவங்களில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. மொத்த மக்காச்சோள உற்பத்தியல் கரீப் பருவ உற்பத்தி 75 சதவீதம்

பங்களிக்கிறது. இந்திய அரசின் வேளாண் துறைக் கணக்கீட்டின் படி 2012 ல் காரீப் பருவத்தில் 14.89 மில்லியன் டன் மக்காச்சோளம் உற்பத்தியாகும். இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 8.19 சதவீதம் குறைவாகும்.

வர்த்தக மூலங்களின்படி, இந்த ஆண்டு காரீப் பருவத்தில் காலம் தவறிய பருவமழையினால் மக்காச்சோளம் பயிரிடும் அனைத்து மாநிலங்களிலும் விதைப்பு குறைந்துள்ளது. தமிழ்நாடு மிகக் கடுமையான அளவு பாதிப்படைந்துள்ளது. மேலும் 30 சதவீத விதைப்பு மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தக மூலங்கள் தெரிவிக்கின்றன. அக்டோபர் மத்தியில் இதன் வரத்து எதிர்பார்க்கப்படுகிறது.

வர்த்தக மூலங்களின்படி இம்மாத இறுதியில் கர்நாடகாவிலிருந்து மக்காச்சோள வரத்து எதிர்பார்க்கப்படுவதால் நவம்பர் மாதத்தில் குவிண்டால் விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.50-100 குறைய வாய்ப்புள்ளது. சர்வதேச உற்பத்தி அதிகரித்துள்ளபோதும் இந்தியாவின் மக்காச்சோள உற்பத்தி கடந்த ஆண்டை விட 8 சதவீதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே நிலையான தீவனத்தேவை மற்றும் ஏற்றுமதித் தேவையினால் விலை அதிகரித்துக் காணப்படும்.

காரீப் பருவ மக்காச்சோளம் அனைத்து மாநிலங்களிலிருந்தும் வரத் தொடங்கியுள்ள நிலையில் விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனடியாக விற்பனை செய்வதா அல்லது சேமித்து வைத்து விற்பனை செய்வதா என்பதை அறிய ஆவலாக உள்ளனர். அவர்களின் வினாக்களுக்கு விடையளித்து சரியான முடிவுகளை எடுக்கும் விதமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், உடுமலை சந்தையில் நிலவிய 15 வருட மக்காச்சோள விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி அக்டோபர் மாத இறுதி வரை மக்காச்சோளம் குவிண்டால் ரூ.1350க்கு விற்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும் நவம்பர் 2012 ல் ரூ.1300 என விலை குறையுமென்றும், டிசம்பருக்குப் பிறகு இதன் விலை குவிண்டால் ரூ.1400 வரை உயரும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. மேலும் நல்ல தரமான மக்காச்சோளத்திற்கு கூடுதல் விலையும் கிடைக்கும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 100 கிலோ மக்காச்சோளத்தை சேமிக்க மாதத்திற்கு 1 ரூபாய் 50 பைசா செலவாகிறது. டிசம்பரில் ஏற்படும் விலை உயர்வு மக்காச்சோளத்தை சேமிக்க ஆகும் செலவு மற்றும் வட்டி செலவினங்களுக்கு ஈடுகட்டும். ஆகவே சேமிக்க வசதியுள்ள விவசாயிகள் டிசம்பர் 2012 வரை சேமித்து வைக்க சிபாரிசு செய்யப்படுகின்றனர். அவ்வாறு சேமிக்க வசதியில்லாதவர்கள் நவம்பரில் விலை குறைய வாய்ப்புள்ளதால் அறுவடை செய்தவுடன் விற்பனை செய்ய பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003
தொலைபேசி: 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:**

பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்